# 'ரூ. 2 கோடியில் காலிங்கராயன் வாய்க்கால் சுத்தப்படுத்தப்படும்'

ஈரோடு, செப். 6: காலிங்கராயன் வாய்க்காலை சுத்தப்படுத்த ரூ. 2 கோடி மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாக மத்திய சமூக நீதித்துறை இணை அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் தெரிவித்தார்.

எழுத்தாளர் பாஸ்கரதாசன் எழுதிய 'காலிங்கராயன் கதை' நூலை வெளியிட்டும், படத்தை திறந்து வைத்து ஞாயிற்றுக்கிழமை அவர் பேசியது:

கொங்கு மண்டலத்தில் பிறந்த அனைவரும் சிறந்த உழைப்பாளிகள். இவர்களுக்கு எடுத்துக்காட்டாக 800 ஆண்டுகளுக்கு முன் காலிங்கராயன் வாய்க்காலை வெட்டிய வெள்ளோட்டைச் சேர்ந்த லிங்கைய கவுண்டர் காலிங்கராயன் உள்ளார்.

காலிங்கராயன் வாய்க்காலைச் சுத்தப்படுத்த மத்திய அரசு ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி மராமத்துப் பணிகள் தற்போது 75 சதம் முடிவடைந்த நிலையில் உள்ளன.

கொங்கு சமுதாயத்தில் திருமண நிகழ்ச்சிகள் நடைபெறும் போது மணமக்களுக்கு பரிசாக 'காலிங்கராயன் கதை' நூலை வழங்க வேண்டும்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு சுத்தமான தண்ணீர் ஓடிய இக்கால்வாயில் தற்போது தொழில்சாலைகள் வெளியேற்றும் சாயக்கழிவு, தோல்கழிவுகள் கலந்து மாசுபட்டுள்ளது.

வருங்காலத்தில் காலிங்கராயன் வாய்க்காலில் இதுபோன்ற கழிவுகள் கலக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தீரன்சின்னமலை, காலிங்கராயன் போன்றவர்கள் அனைத்து சாதியினரையும் ஒருங்கிணைத்து நடத்திச் சென்றது போல தற்போதுள்ள கொங்கு சமுதாயத்தினரும் அனைவரையும் ஒருங்கிணைத்து நடத்திச் செல்ல வேண்டும் என்றார்.

விழாவுக்கு எஸ்கேஎம் நிறுவனங்களின் தலைவர் எஸ்.கே.எம்.மயிலானந்தன் தலைமை வகித்தார்

நீதிபதி ஆர்.செங்கோட்டுவேலன், ஈரோடு விளையாட்டு அறக்கட்டளைத் தலைவர் கொங்கு என்.கொளந்தசாமி, கொங்கு ஆய்வு மைய அமைப்பாளர் புலவர் ராசு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கச் செயலர் ஈஸ்வரன், இந்திராணி காலிங்கராயன், நாகம்மாள் காலிங்கராயன், கதிர்வேல் காலிங்கராயன், மாணிக்கம் காலிங்கராயன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



'காலிங்கராயன் கதை' நூலை மத்திய இணை அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் வெளியிட, பெற்றுக் கொள்கிறார் எஸ்கேஎம்.மயிலானந்தன். உடன் (இடமிருந்து) சக்தி மசாலா நிறுவன இயக்குநர் பி.சி.துரைசாமி, யு.ஆர்.சி. நிறுவனங்களின் தலைவர் யு.ஆர்.சின்னுசாமிகவுண்டர், நடிகர்கள் சத்யராஜ், சிவகுமார், நூல் ஆசிரியர் பாஸ்கரதாசன், உழவர் உழைப்பாளர் கட்சித் தலைவர் கே.செல்லமுத்து, சிலம்பொலி செல்லப்பன்.